செங்கம் தொகுதியில் அரசு கலை, அறிவியல் கல்லூரியை அமைத்திடுக!

திருவண்ணாமலை அருணாசலம் கோவில் - ரூ.128 கோடியில் பெருந்திட்டம் அறிவித்ததற்கு நன்றி!

சட்டப்பேரவையில் செங்கம் மு.பெ.கிரி பேச்சு!

சென்னை. ஏப். 21-
சட்டப் பேரவையில் சுற்றுலா மற்றும் இந்து சமய அறநிலையத் துறை மானியத்தில் செங்கம் தொகுதி உறுப்பினர் மு.பெ.கிரி பேசுகையில் திருவண்ணாமலைக்கு தினம் தினம் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்தவண்ணமிருக்கின்றன. திருவண்ணாமலைக்கு ரூ.128 கோடி ஒதுக்கீடு பெருந்திட்டம் அளித்த முதல்வருக்கு நன்றி என்று குறிப்பிட்டார்.

சட்டப் பேரவையில் மு.பெ.கிரி பேசியதாவது

மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு என்று பகுத்தறிவு பாதையை வகுத்துத் தந்த, தான் மறைந்து அரை நூற்றாண்டுக்கு பிறகும், தான் உதிர்த்த கருத்துகளால் திராவிடக் கொள்கையின் எதிரிகளை இன்றளவும் தூங்கவிடாமல் விழித்திருக்கச் செய்த பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களை வணங்குகிறேன்.

அரசியல் சட்ட மாமேதை இன்றளவும், என்றைக்கும் எல்லோருக்கும் பாதுகாப்பு அரணாக இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கித் தந்த புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் அவர்களை வணங்குகிறேன்.

இவர் இல்லையேல் நாம் இல்லை. சாமானியனும் சரித்திரம் படைக்கலாம் என்பதை இந்திய திருநாட்டில் உருவாக்கித் தந்து, என்னை போன்ற சாமானியனும் இந்த அவையில் பேசுகின்ற நிலையை உருவாக்குவதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் மக்கள் இயக்கத்தை உருவாக்கித் தந்த பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பேரறிஞர் அண்ணா போன்றோர் பேசியதை, எழுதியதை எண்ணங்கள் அத்தனையும் தமிழ் நிலப்பரப்பில் சட்டத்தின்மூலம், திட்டத்தின்மூலம் தமிழகத்தை செதுக்கிய சிற்பி முத்த மிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவர் இப்படி இருப்பாரா? பெரியாரைப் போல், அண்ணாவைபோல், கலைஞரைபோல் செயல்மிக்க தலைவராக இருப்பாரா என்று எத்தனையோ ஏச்சுக்கும் பேச்சுக்கும் மத்தியில் 2021 ஆம் ஆண்டு, முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்று பொறுப்பேற்றுக் கொண்ட முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) அன்புத் தலைவர் தளபதி அவர்கள் பெரியாரையும் அண்ணாவையும் கலைஞரையும் மிஞ்சி நிற்கும் திராவிடப் பெருந்தலைவராக பரிமாணம் பெற்று (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட இயக்கக் கொள்கைகளில் துளியளவும் தடம் மாறாமல், தமிழ்நாட்டிலிருந்து இந்திய திருநாட்டிற்கே வழிகாட்டிக் கொண்டிருக்கின்ற திராவிட மாடல் நாயகன், மாநில சுயாட்சியை மீட்க போகும் வேந்தர், மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இனி திராவிட இயக்கம் இவ்வளவுதான் என இன எதிரிகளும் கொள்கை எதிரிகளும் கொக்கரிக்க முயலுகின்ற நேரத்தில், இன எதிரிகளும், கொள்கை எதிரிகளும் கொக்கரிக்க முயலுகின்ற நேரத்தில் நான் இருக்கிறேன் திராவிட இயக்கத்தின் ஐந்தாம் தலைமுறைத் தலைவர் நான் இருக்கிறேன் என்று சொல்லி 50 ஆண்டுகால திராவிட இயக்கக் கொள்கைகளைக் கொண்டு தமிழ்நாட்டின் மக்களையும் மண்ணையும் காப்பேன் என்று சொல்லால் மட்டுமல்ல, செயலாலும் இந்திய நிலப்பரப்பு முழுவதும் இருக்கும் கொள்கை எதிரிகளுக்கு சிம்ம சொப்பனமாக பணியாற்றிக் கொண்டிருக்கின்ற தமிழ்நாட்டின் எதிர்காலம் எங்கள் இயக்கத்தின் வருங்காலம் துணை முதலமைச்சர், இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவை முன்னவர் அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நான் இந்த உயரத்திற்கு வருவதற்கு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களிடமும், திராவிட மாடல் நாயகன் தளபதி அவர்களிடத்திலும், எதிர்காலம் சின்னவர் அவர்களிடத்திலும் பரிந்துரை செய்து பணியாற்றி என்னைக் காத்துக் கொண்டிருக்கின்ற உழைப்பால் உயர்ந்தோர், உழைப்போரை மதிப்போர், எங்கள் ஆற்றல்மிகு பொதுப் பணித் துறை அமைச்சர் ஐயா அவர்களை வணங்குகிறேன்.

அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தொடர்ந்து மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவராக, இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக என்றும் மக்கள் பணியாற்று வதற்கு வாய்ப்பை உருவாக்கித் தந்த செங்கம் சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும், மாநில, மாவட்ட நிர்வாகி களுக்கும் ஒன்றிய கழக செயலாளர்கள், நகர செயலாளர்கள், கிளைக் கழக செயலாளர்கள் அனைத்துக் கழக பொறுப்பாளர்களுக்கும், தோழமைக் கட்சித் தலைவர் மற்றும் தோமைக் கட்சி தோழர்களுக்கும், அரசியலுக்கு அப்பாற்பட்டு என் வெற்றிக்காக உறுதுணையாக இருக்கின்ற வியாபார பெருங்குடி மக்கள், தொழிலாளர் தோழர்கள், விவசாயிகள், நண்பர்கள், உறவினர்கள், எனது தாய், தந்தை, மனைவி, மக்கள், உற்றார் உறவினர், நண்பர்கள், குடும்பத்தினர் அனைவருக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாட்டில் இலட்சக்கணக்கான, உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகள் முக்கிய நகரங்களான திருவண்ணாமலை, மாமல்லபுரம், திருச்செந்தூர், பழனி, இராமேஸ்வரம், கன்னியாகுமரி, நாகூர், வேளாங்கண்ணி ஆகியசுற்றுலாத்தலங்களுக்கு வந்து செல்வதற்கு அதற்குரிய திட்டங்களை முழுமையாகச் செய்வதற்கு 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியதோடு, அதற்கு தனியாக ஆணையங்களை உருவாக்கித் தந்திருக்கின்ற முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை: இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையைப் பற்றி என்னென்னவோ சொல்கிறார்கள். இந்த அரசு என்பது இந்து விரோத அரசு என்று சொல்கிறார்கள். தமிழ்நாடு தோன்றிய வரலாற்றிலிருந்து இன்று வரையில், திராவிட மாடலின் 4 ஆண்டுக்கால ஆட்சிதான் இந்துக்களுக்கும், இந்து சமய அறநிலையத் துறைக்கும் சிறப்பான ஆண்டு என்பதற்கு சில குறிப்புகளை பதிவிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அன்னை தமிழில் அர்ச்சனை, அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம், பெண் ஓதுவார் நியமனம், 50 கோடி ரூபாயில் ஆதிதிராவிடர்திருக்கோயில் திருப்பணி, 80 கோடி ரூபாயில் பழனி இடும்பன் மலை, திருநீர் மலை, திருப்பரங்குன்றம் ஆகிய இடங்களில் கம்பி வட ஊர்தி rope car, 411 கோடி ரூபாயில் திருமண மண்டபங்கள், 3,776 கோடி ரூபாயில் 8,436 திருக்கோயில் திருப்பணிகள், 39 கோடியே 56 இலட்சம் ரூபாயில் பசுமடங்கள், அரசு செலவில் இராமேஸ்வரம், காசி ஆன்மிக பயணம், 177.37 கோடி ரூபாயில் 490 திருக்குளங்கள் சீரமைப்பு, 110 கோடி ரூபாயில் 115 மரத் தேர்களை புதியதா கவும், பழைய தேர்கள் சீரமைப்பு, 26 கோடியே 91 இலட்சம் ரூபாயில் 9 புதிய வெள்ளித் தேர்கள், 31 கோடி ரூபாயில் 5 தங்கத் தேர்கள் ஆகியவை செய்யப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்ல, அரசு ஊழியர்களுக்கு மட்டும் தான் அரசு குடியிருப்பு இருக்கிறது, ஏதோ ஒரு சமூகத்தை, திராவிட மாடல் அரசு, திராவிட முன்னேற்றக் கழகம் புறக்கணிக்கிறது என்று சொல்பவர்களுக்கு நான் ஒரு செய்தியைச் சொல்ல விரும்பு கிறேன். இன்றைக்கு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் சார்பாக அர்ச்சகர்களுக்கும் குடியிருப்பு கட்டித் தந்த ஒரே அரசு, திராவிட மாடல் அரசு என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, 62.76 கோடி ரூபாயில் 27 கோயில்களுக்கு இராஜகோபுரம், 191 கோடி ரூபாயில்— எல்லோரும் எடுத்துக்கொண்டு மறைத்த தங்கத்தை பாதுகாத்து, வங்கியிலே பாதுகாக்கின்ற திராவிட மாடல் அரசு என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, (குறுக்கீடு) ஆமாம், தங்கவேல் காணாமல் போனதாகச் சொல்வார்கள்.

அதுமட்டுமல்ல, திராவிட மாடல் ஆட்சியில், மன்னர் காலந்தொட்டு, மன்னர் காலத்திலே மக்களுக்காக உருவாக்கப்பட்ட ஆலயங்கள் மக்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டு, ஆட்சியிலே இருந்த மன்னர்கள், மக்களாட்சியில் ஒப்படைத்தார்கள். மக்களாட்சியில் ஒப்படைக்கப்பட்ட அந்த ஆலயங்கள் மக்களாட்சி நடத்துகின்ற அரசிடத்திலே இல்லாமல் எங்களிடத்திலே தாருங்கள் என்று கேட்பவர்களுக்கு நான் ஒரு செய்தியைச் சொல்ல விரும்பு கின்றேன். முதலமைச்சர் அவர்களின் ஆணையின்பேரில் ஆயிரம் ஆண்டு கோயில்களைக் கண்டறிந்து, 714 கோயில்களைக் கண்டறிந்து 425 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 53 கோயில்களும் மற்றும் இதர கோயில்கள் என்று சற்றேறக்குறைய 3,000 கோயில்களுக்கு குடமுழுக்கு செய்த ஒரே ஆட்சி, திராவிட மாடல் ஆட்சி என்பதனை நான் பெருமையாகச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7513.62 ஏக்கர் நிலம் மீட்பு!

அதுமட்டுமல்ல, கோயில் சொத்து, சிவன் சொத்து குலநாசம் என்று சொல்வார்கள். கோயில் சொத்தை கொள்ளையடித்தவர்களிடமிருந்து மீட்டு, 956 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 7513.62 ஏக்கர் நிலம், 7,650 கோடி ரூபாய் மதிப்பு சொத்தை மீட்டு, இன்றைக்கு அந்தந்த திருக் கோயில்களின்பேரில், நவீன கருவிகளைக் கொண்டு, அதுதான் முக்கியம், மீட்டது முக்கியமல்ல, நவீன கருவிகளைக் கொண்டு, சுற்று வேலி அமைத்து, அந்தத் திருக்கோயிலின் பெயரிலேயே அதை வைத்திருக்கின்ற இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் பிறந்து, வளர்ந்த ஊர் திருவண்ணாமலை. திருவண்ணாமலையில் ஒரு பெருமழை பெய்தது. எப்போதும் இல்லாத பெருமழை அந்த பெருமழை. ஆனால், திருவண்ணாமலையோ அக்னி ஸ்தலம். அக்னி ஸ்தலமாக இருக்கின்ற திருவண்ணா மலை குளிர்ந்து மலைச்சரிவு ஏற்பட்டது. மலைச்சரிவு ஏற்

பட்டு 7 பேர் அந்த மலைச்சரிவில் சிக்கிக் கொண்டார்கள். மலைச்சரிவில் 7 பேர் சிக்கிக் கொண்டவுடன் முதலமைச்சர் அவர்கள் உடனடியாக ஆணையிட்டு, துணை முதலமைச்சர் அவர்கள் நேரிலே வந்து, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடன் இணைந்து மீட்புப் பணியை முடுக்கி விட்டதோடு, அந்த ஆண்டு திருவிழா நடைபெறுமா, நடைபெறாதா, இவர்கள் திராவிட கழகத்துக்காரர்கள்,

இவர்கள் கருப்புச் சட்டைக்காரர்கள் இந்த தேர்த் திருவிழாவை நடத்த மாட்டார்கள் என்று எல்லோரிடத்திலும் தீபத் திருவிழாவை ஆன்மிக மக்களிடத்திலே ஐயத்தை ஏற்படுத்த வஞ்சகர் வாய் மூடிக்கொள்ளும் அளவுக்கு முதலமைச்சர் அவர்களின் ஆணையை ஏற்று தமிழ் நாட்டின் துணை முதலமைச்சர் அவர்கள் நேரிலே வந்து ஆய்வு செய்தார்கள். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பகுத்தறிவுவாதி. அவர் கோயிலுக்குள்ளே வரவில்லை என்று சொன்னாலும், பலமுறை இதற்காக ஆய்வு செய்து, நீங்களும் அதிலே கலந்து கொண்டு அரியபல கருத்துகளை சொன்னீர்கள். அதனடிப்படையில் அந்த திருவிழாவை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தன்னை அந்ததுறையில்திருக்கோயில் பணியாளராகவே கருதிக் கொண்டு அந்த 10 நாட்கள் திருவிழாவை அங்கேயே இருந்து இயற்கை இடர்பாடிலே ஏற்பட்ட அந்த மண் சரிவை தவிர ஒரு துளிகூட இடர்பாடு இல்லாமல் 45 இலட்சம் மக்கள், வந்த ஆன்மிக பெரியோர்கள், வந்தவர்கள் வந்த வண்ணம் வீடு சென்று சேரும் வரையில் இந்த திராவிட மாடல் அரசு பணியாற்றி இருக்கிறது.

அதற்கு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்தத் துறையின் அமைச்சர் சேகர்பாபு அவர்களுக்கும் எங்கள் மாவட்ட மக்களின் சார்பில், ஆன்மிக மக்களின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செய்யாற்றங்கரை யில் எங்கள் அனுதாம்பிகை விசுவேஸ்வரர் கோயில் இருக்கிறது, அதற்கு பணம் கொடுங்கள் என்று கேட்டேன். அதற்கென்ன நண்பா கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னார்கள். பணத்தை ஒதுக்கினார்கள். பணத்தை ஒதுக்கியது மட்டுமல்ல, மீண்டும் அதற்கு குறையாக இருக்கிறது என்று சொன்னேன். கூடுதலாக நிதி ஒதுக்கி தந்தார்கள். இன்றைக்கு திருவண்ணா மலை என்பது ஒரு காலத்திலே ஆந்திரத்திலே இருக்கின்ற திருப்பதிக்குத்தான் எல்லோரும் செல்வார்கள். அதற்குப் பிறகு கேரளத்திலே இருக்கின்ற சபரிமலைக்கு செல்வார்கள். ஆனால், இன்றைக்கு தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்தில் மட்டுமல்ல, குறிப்பாக ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா பகுதியிலே இருக்கின்ற எண்ணற்ற மக்கள் தினம் தினமும் இலட்சம் இலட்சமாக திருவண்ணாமலைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து முதல மைச்சர் அவர்கள் அதற்கு ஒரு புதிய திட்டத்தைத் தந்து பெருந்திட்ட தீர்மானம் ரூ.128 கோடியை ஒதுக்கித் தந்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அந்த திருவண்ணா மலை என்பது 14 கிலோ மீட்டர் சுற்றளவு கொண்டது. தினம் தினம் இலட்சக்கணக்கான மக்கள் வருகிறார்கள் என்பதை அறிந்து மாவட்ட வளர்ச்சியில் அக்கறையோடு இருக்கின்ற பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அந்த 14 கிலோ மீட்டருக்கும் வருகின்ற மக்களுக்கு சுகாதாரமான குடிநீரைத் தர வேண்டுமென்று 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 14 சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை அமைத்து தந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அந்த கழிவறை, உலகத்தரம் வாய்ந்த கழிவறை ஒரு, ஒரு கழிவறையும் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் 5 கழிவறை இன்றைக்கு நன்கொடையாளர்களிடமிருந்து அதைப் பெற்றுத் தந்திருக்கின்றார்கள். மீதமிருக்கின்ற பணியும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அதை முடிப்பார் கள் என்பதைச் சொல்லி, என் தொகுதி கோரிக்கைகளை தங்களிடம் தருகின்றேன். அதை பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று சொல்லி, ஒரேயொரு கோரிக்கையை மட்டும் நான் சொல்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம் சட்டமன்றத் தொகுதி என்பது ஜவ்வாதுமலை உச்சியிலே ஆரம்பிக்கிறது. பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே, கல்வராயன் மலையிலே போய் முடிகிறது. வடக்கு தெற்காக 97 கிலோ மீட்டர். கிழக்கு மேற்காக 60 கிலோ மீட்டர். பழங்குடி மக்கள், ஆதி திராவிட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப் பட்ட மக்கள் வெறும் விவசாயக் கூலித் தொழிலாளர்களாக மட்டும் ஆகின்ற பணி. அங்கே அரசுப் பள்ளி 23 இருக்கின்றன. தனியார் பள்ளி 16 இருக்கின்றன. ஆண்டுதோறும் மாணவர்கள் 2,687 பேரும், மாணவிகள் 2,687 பேரும் ஆக மொத்தம் 5,499 மாணவர்கள் இந்தாண்டு 12 ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இது ஒவ்வோராண்டும் படிக்கிறார்கள். ஒரு ஆய்வறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். உயர் கல்வியை தமிழ்நாட்டிலே எந்தப் பகுதி பெற்றிருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே வன்கொடுமை தடுப்பு அந்த ஆய்வுக் கூட்டத்தில் ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பிலே படித்த அறிக்கையிலே சொன்னார்கள். செங்கம் பகுதி உயர் கல்வியிலே பின் தங்கி இருக்கிறது என்று சொன்னார்கள்.

அப்படி பின்தங்கி இருப்பதற்கு காரணம் நாங்கள் கல்லூரி படிக்க வேண்டுமென்று சொன்னால் கிருஷ்ணகிரிக்கு 80 கிலோ மீட்டரும், அருருக்கு 70 கிலோ மீட்டரும், திருப்பத்தூருக்கு 60 கிலோ மீட்டரும்,

வேலூருக்கு 110 கி.மீ.ம், செய்யாருக்கு 120 கி.மீ.ம், பர்கூருக்கு 80 கி.மீ.ம், ஏன்? தலைநகராக இருக்கின்ற திருவண்ணாமலைக்கும் 35 முதல் 60 கி.மீ. தூரம் சென்றுதான் படிக்க வேண்டிய நிலை உள்ளது. அதனால் தான் எங்கள் மாவட்டத்திற்கு உயர் கல்வி தேவைப்படுகிறது. எனவே, கருணை உள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்களும், இந்த 4 ஆண்டுகாலத்தில் கேட்ட அனைத்துத் திட்டங்களையும், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, அவை முன்னவர் அவர்கள், எங்கள் மண்ணின் மைந்தன் அவர்கள் உட்பட அனைத்து அமைச்சர் பெருமக்களும் என் தொகுதிக்குக் கேட்டவற்றையெல்லாம் தந்திருக்கின்றார்கள்.

அதற்குப் பாலமாக இருந்து பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பெற்றுத் தந்திருக்கிறார்கள். நீங்களும் சேர்ந்து என்னுடைய கோரிக்கைகளை நிறைவேற்றி இந்த நிதியாண்டிலேயே செங்கத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைப் பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டு, அனைவருக்கும் நன்றி கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

செங்கம் தொகுதி, ஜவ்வாதுமலை ஒன்றியம் மேல்பட்டு முதல் சின்னக்கீழ்பட்டு, தென்மலை அத்திப்பட்டு, நெல்வாய், கோவில் தட்டியாப்பட்டு, வாழைக்காடு, நாச்சியார்மலை, கல்லாப்பட்டு, அத்திப்பட்டை இணைக்கும் வனச்சாலையை அமைத்துத் தர வேண்டும். மேலும் அனைத்து வனப்பள்ளிகளையும் சீரமைத்து, காலி ஆசிரியர் பணியிடங்களை நிரப்பி மலை வாழ் மாணவர்களின் கல்வித் தரத்தை உறுதிபடுத்த வேண்டும்.

செங்கம்ஜமுனாமரத்தூர் செல்லும் சாலையிலிருந்து எருக்கம்பட்டு வனச்சாலையை அமைத்துத் தர வேண்டும்.

ஊர்கவுண்டனூர் ஊராட்சி கோயில் கொள்ளையிலிருந்து படபஞ்சமரத்தூர் புதிய வனச் சாலையை அமைத்துத் தர வேண்டும்.

செய்யாற்றின் குறுக்கே பாலம்!

குப்பநத்தம் அணையின் கீழ்பகுதியில் செய்யாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும். குப்பநத்ததிலிருந்து மாரியம்மன் கோவிலுக்க செல்கின்ற இடையே உள்ள செய்யாற்றின் குறுக்கே பாலம் அமைத்து தர வேண்டும்.

கொட்டாவூரிலிருந்து கொட்டாவூர் அண்ணா நகர் செல்லும் சாலையில் செய்யாற்றின் குறுக்கே பாலம் அமைத்துத் தர வேண்டும்.

செங்கம் சிறுபாலத்தை மேம்பாலமாக கட்டித் தர வேண்டும்.

தென்பெண்ணையாற்றில் நீப்பத்துரை அருகே, ராயண்டபுரம் அருகே, அகரம்பள்ளிப்பட்டு அருகே மற்றும் சதாகுப்பம் அருகே தடுப்பணைகள் அமைத்துத் தர வேண்டும்.

சாத்தனூர் அணையில் சுற்றுலா பயணிகள் நலன் கருதி மின்சார இரயில் (Battery Rail) இயக்க வேண்டும். சுற்றுலா துறைக்கு புதிய தங்கும் விடுதியுடன் கூடிய உணவகம் கட்டித் தர வேண்டும். சாத்தனூர் அணையில் நவீன வசதியுடன் கூடிய நீச்சல் குளம் அமைத்துத் தர வேண்டும். சாத்தனூர் அணை நீர் பிடிப்பு பகுதியின் மையப் பகுதியில் உள்ள ISLAND இல் பூங்காவுடன் கூடிய உணவகம் அமைத்துத் தருவதோடு ரோப் கார் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

பூங்காக்களுக்கு சுற்றுச் சுவர்!

குப்பநத்தம் அணையின் நீர்பிடிப்பு பகுதியில் நீரின் கொள்ளளவை உயர்த்த மண்திட்டுக்களை அகற்றித் தர வேண்டும். குப்பநத்தம் அணையில் நவீன வசதியுடன் கூடிய நீச்சல் குளம் அமைத்துத் தர வேண்டும். இங்கு உள்ள பூங்காவிற்கு சுற்றுச் சுவர் அமைத்துத் தர வேண்டும். குப்பநத்தம் அணை நீர் பிடிப்பு பகுதி ஒட்டியுள்ள கல்லாத்தூர் கிராமத்திற்கு தடுப்புச் சுவர் அமைத்துத் தர வேண்டும்.

செங்கம் போக்குவரத்து பணிமனைக்கு புதிய கட்டடம் மற்றும் சிமெண்ட் தளம் அமைத்துத் தர வேண்டும். செங்கம் to திருப்பூர், இளங்குன்னி to சென்னை, தாழையூத்து to சென்னை, செங்கம் to சென்னை, நீப்பத்துரை to திருப்பதி, செங்கம் to கள்ளக்குறிச்சி ஆகிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க வேண்டும். செங்கம் to மதுரை, செங்கம் to திருச்செந்தூர், சாத்தனூர் அணை to சென்னை ஆகிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க வேண்டும்.

தானிப்பாடி அரசு மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவர் பணியிடங்கள், செவிலியர்கள் மற்றும் பிற பணியாளர்கள் நியமித்திட வேண்டும். தானிப்பாடி அரசு மருத்துவமனைக்கு தாய், சேய் நலபிரிவு கட்டடம், விபத்துகால தீவிர சிகிச்சை பிரிவு கட்டடம், நவீன வசதியுடன் கூடிய பிரேத பரிசோதனை கட்டடம் கட்டித் தர வேண்டும்.

செங்கம் அரசு மருத்துவமனையில் வெளிப்புற நோயாளிகளுக்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். மேலும் சித்த மருத்துவ பிரிவுக்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.

தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். தண்டராம்பட்டு நீதி மன்றத்திற்கு குடியிருப்புடன் கூடிய புதிய நீதிமன்ற கட்டடம் கட்டித் தர வேண்டும். பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

தானிப்பாடி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

செங்கம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு வகுப்பறையுடன் கூடிய ஆய்வுக் கூடம் கட்டித் தர வேண்டும்.

தரடாப்பட்டு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். தரடாப்பட்டு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தித் தர வேண்டும்.

நாரயணகுப்பம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தித் தர வேண்டும்.

சாத்தனூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தித் தர வேண்டும்.

பெரும்பாக்கம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தித் தர வேண்டும்.

செங்கம் பாலியப்பட்டு கிராமத்திற்கு இந்த ஆண்டு புதியதாக தொடக்கப்பள்ளி தொடங்கிட வேண்டும். செங்கம் பரமனந்தல் கிராமம், பக்கிரிபாளையம் கிராமம், மேல்பள்ளிப்பட்டு கிராமம், ஆண்டிப்பட்டி கிராமம் போன்ற கிராமங்களுக்கு ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் சமுதாய கூடம் கட்டித் தர வேண்டும்.

சமுதாயநலக்கூடம்!

தண்டராம்பட்டு பெருங்களத்தூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் சமுதாய கூடம் கட்டித்தர வேண்டும். கீழ்வணக்கம்பாடி கிராமத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் சமுதாய கூடம் கட்டித் தர வேண்டும். ரெட்டியார்பாளையம் கிராமத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் சமுதாய கூடம் கட்டித் தர வேண்டும்.

ஜவ்வாதுமலை மேல்பட்டு கிராமம், புளியூர் கிராமம், பலாமரத்தூர் கிராமம், கல்லாத்தூர் கிராமம், ஊர்கவுண்டனூர் கிராம போன்ற கிராமங்க ளுக்கு ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் சமுதாய கூடம் கட்டித் தர வேண்டும்.

தண்டராம்பட்டு அகரம் பள்ளிப்பட்டு கிராமத்தில் இந்து அறநிலையத்துறையின் சார்பில் திருமண மண்டபம் கட்டித் தர வேண்டும்.

செங்கம் நீப்பத்துறை கிராமத்தில் இந்து அறநிலையத்துறையின் சார்பில் திருமண மண்டபம் கட்டித் தர வேண்டும். மேல்பள்ளிப்பட்டு கிராமத்தில் இந்து அறநிலையத்துறையின் சார்பில் திருமண மண்டபம் கட்டித் தர வேண்டும்.

செங்கம் தொகுதியில் சிப்காட் அமைத்துத் தர வேண்டும்.

செங்கம் நகராட்சியில் இராஜ வீதி, பெருமாள் கோவில் தெரு, சிவன் கோவில் தெரு, காயிதே மில்லத் தெரு, தளவநாயக்கன் பேட்டை மில்லத் நகர், தோக்கவாடி, திருவள்ளுவர் நகர், கிருஷ்ணாவரம், நேருநகர், மசூதிதெரு, ஜீவானந்தம் தெரு, சகாய மாதா பள்ளித் தெரு, ஆகிய பிரதான சாலைகளுக்கு வடிகால் உடன் கூடிய சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

செங்கம் நகராட்சியில் பழுதடைந்துள்ள காய்கறி மார்கெட் இடித்து புதிய மார்கெட் கட்டித் தர வேண்டும். செங்கம் சந்தை மைதானத்தில் செந்தமிழ் நகருக்கு சாலை அமைத்து, மீதமுள்ள இடத்தில் சிமெண்ட்தளமும், சுற்றுச்சுவரும் அமைத்துத் தர வேண்டும். செங்கம் நகராட்சிக்கு புதிய நகராட்சி கட்டடம் கட்டித் தர வேண்டும். மேலும் புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும். காயிதேமில்லத் தெருவிலிருந்து கடக்பூர் செல்ல செய்யாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும். செங்கம் நகரத்தில் நவீன வசதியுடன்கூடிய விளையாட்டு மைதானம் அமைத்துத் தர வேண்டும்.

தண்டராம்பட்டில் உள்ள பழைய விளையாட்டு மைதானத்தை நவீன உபகரணங்களுடன் சேர்த்து புதுப்பித்து தர வேண்டும்.

செங்கம் சட்டமன்ற தொகுதிக்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டித் தர வேண்டும்.

தண்டராம்பட்டு மேல்கரிப்பூரிலிருந்து கண்ணக்கந்தல் வனச்சாலை அமைத்துத் தர வேண்டும்.

செங்கம் தொகுதியில் உள்ள 87 ஊராட்சிகளில் உள்ள சுடுகாடுக்கு செல்லும் சாலைக்கு சிறப்பு நிதி ஒதுக்கி அனைத்து சுடுகாடு சாலைகளையும் சீரமைத்துத் தர வேண்டும். மேலும் சுற்றுச்சுவர் இல்லாத சுடுகாட்டிற்கு சுற்றுச்சுவர் அமைத்துத் தர வேண்டும்.

செங்கம் இளங்குன்னி ஆரம்ப சுகாதார நிலையம், மேல்பள்ளிப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையம், அரட்டவாடி ஆரம்ப சுகாதார நிலையம். சென்னசமுத்திரம் ஆரம்ப சுகாதார நிலையம், மற்றும் மேல்பென்னாத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம் போன்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் கட்டித் தர வேண்டும்.

தண்டராம்பட்டு அரசு மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர் கட்டித் தர வேண்டும்.

சாத்தனூர் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டித் தர வேண்டும்.

தானிப்பாடி ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டித் தர வேண்டும்.

செங்கம் ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டித் தர வேண்டும்.

பரமனந்தல் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டித் தர வேண்டும்.

சாத்தனூர்அணை பாசன பகுதியில் விடுபட்ட பெருங்களத்தூர் கிராமத்திற்கு பாசன வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

தண்டராம்பட்டு வட்டார கல்வி அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். தண்டராம்பட்டு பெருங்களத்தூரில் புதிய காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

செங்கம் வட்டார கல்வி அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். தண்டராம்பட்டு இளையாங்கன்னி மலை மாதா கோவிலுக்கு சாலை அமைத்துத் தர வேண்டும். பீமாரப்பட்டி ஊராட்சி மேல்வலசை கிராமத்திற்கு வனச்சாலை அமைத்துத் தர வேண்டும். பி.குயிலம் ஊராட்சி நாககொல்லை கிராமத்திலிருந்து சென்னபட்டி கிராமத்திற்கு வனச்சாலை அமைத்துத்தர வேண்டும்.

தண்டராம்பட்டு இராயண்டபுரம் ஊராட்சி விஜயப்பனூர் கிராமத்திலிருந்து பி.குயிலம் செல்லும் சாலைக்கு இடையில் உள்ள தரைப்பாலத்தை மேம்பாலமாக கட்டித் தர வேண்டும்.

தண்டராம்பட்டு பெருங்குளத்தூர் ஊராட்சி கலைஞர் நகரில் உள்ள 48 வீடுகளுக்கு பட்டா வழங்க வேண்டும்.

தண்டராம்பட்டு அகரம் பள்ளிப்பட்டு கிராமத்தில் ஆதிதிராவிட நலத்துறை இடத்தை அளந்து முறையாக பட்டா வழங்கிட கேட்டுக் கொள்கிறேன். தண்டராம்பட்டு தரடாப்பட்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பழுதடைந்த கட்டடத்தை இடித்து சுற்றுச்சுவருடன் கூடிய புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். மேல் கரிப்பூரில் புதிய கால்நடை மருந்தகம் அமைத்துத் தர வேண்டும். தண்டராம்பட்டு வட்டத்திற்கு தனியாக மின்கோட்ட பொறியாளர் அலுவலகம் தொடங்கிட வேண்டும்.

குப்பநத்தம் அணையிலிருந்து மேல்புறம் கால்வாய் அமைத்து குப்பநத்தம், கொட்டாவூர், பரமனந்தல், புதுப்பட்டு, ஆலப்புத்தூர், அன்வராபாத் ஆகிய ஊராட்சிகளிலுள்ள ஏரிகளுக்கு தண்ணீர் நிரப்ப வேண்டும்.

செங்கம் நகராட்சியின் கழிவுநீர் செய்யாற்றில் கலக்காமல் இருக்க தடுப்புச் சுவர் மற்றும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அமைக்க வேண்டும்.

தண்டராம்பட்டு நாராயணகுப்பம் கூட்டுறவு சங்கத்தை பிரித்து புதியதாக பெருங்களத்தூர் கூட்டுறவு சங்கம் அமைக்க வேண்டும்.

எறையூர் ஏரியிலிருந்து உச்சிமலைகுப்பம், விண்ணவனூர், கண்ணக்குருக்கை, பீமானந்தல், நெடுங்காவாடி ஆகிய ஊராட்சியில் உள்ள ஏரிகளில் தண்ணீர் நிரப்ப வேண்டும்.

தண்டராம்பட்டு கொழுந்தம்பட்டில் சமுதாய கூடம் கட்டித் தர வேண்டும்.

பாண்டி- கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிசாலையாக மாற்றித் தர வேண்டும்.

நீப்பத்துறை கொட்டாவூர் கிராமத்திலிருந்து கருங்காலிபாடி வனச்சாலை அமைத்துத் தர வேண்டும்.

மேல்செங்கம் பகுதியில் விமான நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

இவ்வாறு மு.பெ.கிரி பேசினார்.

வேளச்சேரி மேற்கு பகுதியில் மக்களின் தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தலை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி 175 வது வட்ட இளைஞர் அணியைச் சேர்ந்த கு.ரூபேஷ் தலைமையில் பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் வட்ட செயலாளர் க.பாரதிதாசன், என்.நேசன், பகுதி அமைப்பாளர் ஆர்.கே.ராகுல்குமார், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் துணை அமைப்பாளர் ஜி.மணிகண்டன் ஏற்பாட்டில் கோடை காலங்களில் மக்களின் தாகம் தீர்க்க நீர்மோர் பந்தல் பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், என்.எம்.கதிரேசன், தேவிகதிரேசன் எம்.சி, முன்னிலையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆகியோர் திறந்து வைத்தனர். எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், இர.பொன்இளவரசன், எஸ்.அரிஷ்குமார், மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட நிர்வாகிகள் இளைஞர் அணியினர் கலந்து கொண்டனர்.